### (After lunch—3-30 p.m.)

### VI.—NON-OFFICIAL BUSINESS.

### *A.—Bills.*

#### THE MADRAS DOWRY PROHIBITION BILL, 1958 (L.A. BILL NO. 21 OF 1958)

Sri N. K. PALANISAMI : Sir, under rule 21 (3) of the Assembly Rules, I move—

"That the Madras Dowry Prohibition Bill, 1958 (L.A. Bill No. 21 of 1958) be taken up later."

The motion was duly seconded.

The motion was put and carried.

### *B.—Resolutions.*

#### APPOINTMENT OF A COMMITTEE TO ENQUIRE AND MAKE RECOMMENDATIONS REGARDING SERVICE CONDITIONS AND SCALES OF PAY OF ALL CATEGORIES OF EMPLOYEES IN THE STATE GOVERNMENT—*cont.*

Mr. SPEAKER : We shall now take up resolutions. The first resolution is that of Sri M. Kalyanasundaram, an unfinished resolution. Last time the hon. Member Sri V. K. Kothandaraman spoke. If the hon. Member Sri N. K. Palanisami wants to speak, he can speak now.

Sri N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் 27–8–58-ம் தேதியில் ஒரு ஜி.ஓ. போட்டு, கமர்சியல் டாக்ஸ் டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தர்களில், வேலைசெய்துகொண்டிருந்த 243 ப்யூன்களையும், 140 லோயர் டிவிஷன் கிளார்க்குகளையும், 14 பில் கலெக்டர்களையும், அக்டோபர் 1-ம் தேதியிலிருந்து வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். ஏ.ஸி.டி.ஓ., டி.ஸி.டி.ஓ.-க்களுக்கு ப்ரமோஷன் இல்லாமல் மிகவும் அதிருப்திபடுகிறார்கள். அவர்களுக்கு ப்ரோமோஷன் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். உண்மையாக இதற்குப் பிறகு, ரீ-ஆர்கனைசேஷன் என்ற பெயரால் 175 பேர்கள் இருந்த லோயர் டிவிஷன் கிளார்க்குகளுக்குப் பதிலாக, 135-ஆகக் குறைத்திருக்கிறார்கள் ; டி.சி.டி.ஓ.-வை எடுத்துக்கொண்டால், 145 பேர்கள் இருந்தவிடத்தில், 149-ஆக அதிகமாக்கியிருக்கிறார்கள். அதே நேரத்தில், சி.டி.ஓ. கஜடட் ராங்கை எடுத்துக்கொண்டால், அதைப் பதினேழிலிருந்து, 37 பேர்களாக உயர்த்தியிருக்கிறார்கள்.. புதிதாக டெபுடி கமர்ஷியல் ஆபீசர் என்ற முறையிலே ரூ. 800 முதல் ரூ. 1,000 வரை சம்பளத்தில் புதிதாக ஆபீசர்களை வைத்திருக்கிறார்கள். ஆகவே, ரீ-ஆர்கனைசேஷன் என்ற பெயரில் மேலே இருக்கக் கூடியவர்களுக்கு ப்ரமோஷன் கொடுத்து விட்டு, கீழே இருப்பவர்களை ரிட்ரெஞ்ச் செய்வது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன். இது இரண்டாவது திட்டத்தின் குறிக்கோளுக்கு விரோதமானது என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நமக்குத் தெரியும், ஸெண்ட்ரல் பே கமிஷன் 1–1–48-ல் விலைவாசி லிவிங் இன்டெக்ஸ் 260 புள்ளியாக இருந்தபோது, மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நியமிக்கப்பட்டது. இப்பொழுது விலைவாசிகள் ரொம்பத் தூக்கலாக இருக்கிறது. லிவிங் இன்டெக்ஸ் 407 புள்ளி வரையில் ஏறியிருக்கிறது. அன்றிருந்த நிலையில் இன்றைய தினம் வாங்க முடியாது. பிழைக்க முடியாது. மிகக் குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது. இதே சமயத்தில், மத்திய சர்க்கார் தங்கள் ஊழியர்களுக்கு முதல் பே கமிஷன் சிபாரிசுப்படி அதிகச் சம்பளம் கொடுத்தது, அதிகப் படியான டி.ஏ.